# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 13.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 388/SCIC/2024**

Mrs.Beulah Venitha Varkesh - மேல்முறையீட்டாளர்
W/o.Jothi Prakash
Reside at 6/553, 151 Street
Muthamizh Nagar, Kodungaiyur West
Chennai - 600 118. Cell :90032 74710.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
புளியந்தோப்பு காவல் மாவட்டம்
பெருநகர சென்னைக் காவல்
சென்னை - 600 012.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **05.10.2023** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 09.11.2023 |
| 3. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 16.11.2023 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 08.01.2024 |
| 5. | ஆணையத்தின் அறிவிப்பு | 03.04.2024 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பதில் | 26.09.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 24.01.2025 |

1. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 05/10/2023 நாளிட்ட மனுவை The Public Information Officer, W-18, All Women Police Station, MKB

Nagar, Pulianthope, Chennai-39 அவர்களுக்கு அனுப்பி, அதில் "Please furnish me a copy of the Arrest memo of both A1 & A2 for my complaint & FIR No.23 of 2022 dated 19-11-2022 in your good office" என்பன போன்று 15 (பதினைந்து) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (13/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் Mrs.Beulah Venitha Varkesh அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.சரவணன், கண்காணிப்பாளர் மற்றும் திருமதி.சுமதி, பெண் தலைமைக் காவலர் எண்.37313, எம்.கே.பி.நகர் சரகம், புளியந்தோப்பு காவல் மாவட்டம், பெருநகர சென்னைக் காவல் ஆகியோர் அவர்கள் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, நேரில் ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், புளியந்தோப்பு மாவட்டம் அவர்கள் 13/07/2026 தேதியிட்ட கடிதத்தினை ஆணையத்தில் சமர்ப்பித்தனர். அதில் வழக்கினை பிறிதொரு தேதிக்கு ஒத்தி வைக்குமாறு கோரியுள்ளார்.

3. **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான மனுவினை காவல் ஆய்வாளர், அனைத்து மகளிர் காவல் நிலையம், எம்.கே.பி.நகர், புளியந்தோப்பு மாவட்டம் அவர்களுக்கு முகவரியிட்டுள்ளார். காவல் ஆய்வாளர், பொதுத் தகவல் அலுவலர் அல்ல. காவல் துணை ஆணையாளர்தான், பொதுத் தகவல் அலுவலர் ஆவார். எனினும், பொதுத் தகவல் அலுவலர் 26/09/2024 தேதியிட்டு இனம் வாரியான பதில்களை மனுதாரருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. மேலும், இவ்வழக்கு தொடர்பாக இரு தரப்பினரும் சமாதானமாகிவிட்டதாகத் தெரிவித்ததோடு, பெருநகர நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், எழும்பூர் சென்னை அவர்கள் பிறப்பித்த தீர்ப்புரையின் நகலினையும் பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அத்தீர்ப்புரையில் "*எதிரிகளின் மீதான குற்றச் சாட்டுகள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரிகளை இ.த.ச.பிரிவுகள் 498A, 294(b), 323, 406, 506(1) இ.த.ச. மற்றும் 4 of TNPHW Act -ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது* " எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**வழக்கு எண்.SA 388/SCIC/2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
புளியந்தோப்பு காவல் மாவட்டம்
பெருநகர சென்னைக் காவல்
சென்னை - 600 012.

**மேல்முறையீட்டாளர்**

Mrs.Beulah Venitha Varkesh
W/o.Jothi Prakash
Reside at 6/553, 151 Street
Muthamizh Nagar, Kodungaiyur West
Chennai - 600 118. Cell: 90032 74710

RG/Sr.PC